# யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி

## முதலாம் தவணைப் பரீட்சை - 2019

| தரம் - 7 | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்பவியல் | 2 மணித்தியாலம் |
|---|---|---|

**கவனிக்க :- 1** தொடக்கம் **20 வரையுள்ள** வினாக்கள் ஒவ்வொன்றிலும் **1, 2, 3, 4** என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவு செய்க.

**பகுதி - I**

1) நவீன கணினியின் தந்தை என அழைக்கப்படுபவர்
   1. சாள்ஸ் பபேஜ்
   2. பஸ்கால்
   3. வொன் நியூமன்
   4. அடா லவ்லேசா

2) இரண்டாம் தலைமுறைக் கணினியில் பயன்படுத்தப்படும் தொழினுட்பம் எது?
   1) திரான்சிஸ்ரர் 2. வெற்றிடக்குழாய் 3. நுண்சிப்பு 4. மேற்கூறிய யாவும்

3) கணினியின் மூளை எனப்படுவது ?
   1. தாய்ப்பலகை 2. மைய முறை வழி அலகு 3. நுண்செயலி
   4. ஒளிகாலும் இருவாயில்

4) பின்வரும் நினைவகங்களில் அழிதகு நினைவகம் எது
   1. RAM 2. ROM 3.CD 4. பதுக்கு நினைவகம்


5) கணினி இயங்கிக் கொண்டிருக்கும் போது மின் துண்டிக்கப்படும் சந்தர்ப்பங்களில் கணினிக்கு சேமிக்கப்பட்ட மின்சாரத்தினை வழங்குவது?
   1. USB 2. ROM 3. CPU 4. UPS

6) கணினியில் விளையாட்டுக்கள் (Games) விளையாடுவதற்கு பயன்படுத்தப்படும் உள்ளீட்டு சாதனம் பின்வருவனவற்றுள் எது ?
   1. சுட்டி 2. விசைப்பலகை 3. இயக்குப்பிடி 4. ஒளிப்பேனா

7) உட்பொதிந்த (Embedded) கணினி முறைமைகளைக் கொண்ட சாதனங்களின் தொகுதி எது?
   1. செல்லிடத் தொலைபேசி, உழவு இயற்திரம்
   2. துணிச் சலவைப் பொறி, செல்லிடத் தொலைபேசி, துவிச்சக்கரவண்டி
   3. நவீன தொலைக்காட்சிப் பெட்டி, நவீன மோட்டார் வாகனம், துவிச்சக்கரவண்டி
   4. நவீன தொலைக்காட்சிப் பெட்டி, நவீன மோட்டார் வாகனம், செல்லிடத் தொலைபேசி

8) பின்வருவனவற்றுள் எது பணிச்செயல் முறைமைக்கு உதாணரமன்று
   1. Windows 2. Redhat 3. Mac OS 4. Paint

9) சொல்முறை வழிப்படுத்தல் மென்பொருளின் கோப்பு நீட்சி யாது ?
   1. .docx 2. xlxs 3. .jpeg 4. .avi

10) சாரளம் ஒன்றில் காணப்படும்  இக் குறியீடுகள் முறையே குறிப்பது

   1. சாளரத்தை பெரிதாக்கல் (Restore), சாளரத்தை சிறிதாக்கல் (Minimize), சாளரத்தை மூடுதல் (Close)


kalvi.lk

2. சாளரத்தை மூடுதல் (Close), சாளரத்தை சிறிதாக்கல் (Minimize), சாளரத்தை பெரிதாக்கல் (Restore).
3. சாளரத்தை பெரிதாக்கல் (Restore), சாளரத்தை பெரிதாக்கல் (Restore), சாளரத்தை மூடுதல் (Close)
4. சாளரத்தை சிறிதாக்கல் (Minimize), சாளரத்தை பெரிதாக்கல் (Restore), சாளரத்தை மூடுதல் (Close)

11) பின்வரும் சேமிப்பு சாதனங்களில் எது திண்ம நிலைச் சாதனமாகும் ?
1. பளிச்சீட்டு நினைவகம்
2. வன்தட்டு
3. DVD
4. மேற்கூறிய யாவும்


12) ஒரு கோப்புறைக்கு / கோவைக்கு பெயரிடும் போது பின்வருவனவற்றில் எது பயன்படுத்தலாகாது
1. ……..
2. இலக்கங்கள்
3. எழுத்து
4. விசேட குறியிடுகள்

13)  இதனை எவ்வாறு அழைப்பர் ?.
1. கோவை 2. கோப்புறை 3. Document 4. சாரளம்

14) ஆவணம் ஒன்றை முதன் முதலாக சேமிக்கும் போது தெரிந்தெடுக்கப்பட வேண்டிய கட்டளை ?
1. Ctrl 2. Copy 3. Open 4. Save as

15) சொற்களுக்கு இடையில் இடைவெளியை விடுவதற்கு பயன்படுத்தப்படும் விசை எது ?
1. தத்தல் சாவி ( Tab key)
2. திசைச் சாவி (Arrow key)
3. நுழைவுச் சாவி ( Enter key)
4. இடைவெளிச் சாவி (Space bar)

16) வலைமேலோடிக்கு (Web browser) உதாரணமாக அமையாதது பின்வருவனவற்றுள் எது?
1. Google chrome 2. MS word 3. Internet Explorer 4. Mozilla firefox

17)  இக் குறியீடு பாய்ச்சற் கோட்டுப் படத்தில் எதனைக் குறிக்கின்றது ?
1. ஆரம்பம் / முடிவு
2. தீர்மானம் எடுத்தல்
3. செயற்படுத்தல்
4. உள்ளீடு / வெளியீடு

18) CD யின் கொள்ளவு யாது ?
1. 650 MB 2. 800 MB 3. 1.44 MB 4. 2 GB

19) உள்ளீட்டு சாதனமாகவும் வெளியீட்டு சாதனமாகவும் பயன்படுவது எது
1. தெரிவிப்பி 2. சுட்டி 3. தொடுதிரை 4. அச்சுப்பொறி

20) தேடுதல் பொறிக்கு (Search engine) உதாரணமாக அமைவது பின்வருவனவற்றுள் எது?
1. Google chrome 2. Google 3. Internet Explorer 4. Tourch

**( 2 x 20 = 40** புள்ளிகள்)



kalvi.lk

பகுதி 11

***எவையேனும் ஆறு வினாக்களுக்கு விடையளிக்குக.***

01. பின்வரும் படங்களுக்குப் பொருத்தமான பெயரை எழுதுக.

1


2


3



4


5


**2 x 5 = 10 புள்ளிகள்**

02. பின்வரும் பதங்களின் விரிவினை எழுதுக

1. **CD** ……………………………………………………………………………………
2. **RAM** …………………………………………………………………………………
3. **CU** …………………………………………………………………………………..
4. **OS** …………………………………………………………………………………..
5. **KB** ……………………………………………………………………………………

**2 x 5 = 10 புள்ளிகள்**

03. அ) முதலாம் தலைமுறை, இரண்டாம் தலைமுறைக் கணினிகளுக்கிடையிலான வேறுபாடுகள் 2 தருக ?

ஆ) மைய முறைவழி அலகின் இரு பிரதான பகுதிகளை பெயரிடுக ?

இ) காந்த ஊடக சேமிப்பு சாதனங்களுக்கு 2 உதாரணம் தருக ?

ஈ ) வெளியீட்டு சாதனங்கள் 2 குறிப்பிடுக ?

**( 4 + 2 + 2 +2 புள்ளிகள்)**

04. அ ) பணிச் செயல் முறைமை என்றால் என்ன ?

ஆ) பணிச் செயல் முறைமையின் தொழிற்பாடுகள் 2 தருக ?

இ) கோவை, கோப்புறைக்கு இடையிலான வேறுபாடு யாது ?

ஈ) தேடுதல் பொறிக்கு வரைவிலக்கணம் தருக ?

**( 2 + 2 + 4 +2 புள்ளிகள்)**



kalvi.lk

05. அ) எண்கணித மற்றும் தர்க்க அலகினால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளுக்கு 2 உதாரணங்கள் எழுதுக ?

ஆ) இணையத்தின் மூலம் பெறக்கூடிய 4 சேவைகள் தருக ?

இ) ஒளிப்பதிவு மென்பொருளுக்கு 2 உதாரணம் தருக ?

ஈ) கடவுச் சொல் ஒன்றை உருவாக்கும் போது நீர் கவனிக்க வேண்டிய 2 விடயங்களை எழுதுக ?

**( 2 + 4 + 2 +2 புள்ளிகள்)**

06. தரப்பட்டுள்ள வர்த்தகக் குறியீட்டுக்குப் பொருத்தமான பணிச் செயல் முறைமையின் பெயரை எழுதுக .

**1**  ______________________________

**2**  ______________________________

**3**  ______________________________

**4**  ______________________________

**5**  ______________________________

**2 x 5 = 10 புள்ளிகள்**

07. தரப்பட்டுள்ள கூற்றுக்கள் சரியாயின் ( ✓ ) எனவும் பிழையாயின் ( X) எனவும் அடையாளமிடுக.

1. மையமுறை வழி அலகின் கடிகாரக் கதியை அளக்கும் அலகு மில்லி மீற்றர் ஆகும். ( )
2. எண்கணித செயற்பாடானது கட்டுப்பாட்டு அலகால் நிறைவேற்றப்படுகின்றது. ( )
3. பளிச்சீட்டு நினைவகம் ஒரு துணைத் தேக்க சாதனமாகும். ( )
4. விரல் அடையாள இயந்திரம் ஓர் உள்ளீட்டு சாதனமாகும்.. ( )
5. இணையத் தளம் ஒன்றில் ஒன்றுக்கு மேற்பட்ட இணையப் பக்கங்கள் காணப்படலாம். ( )

**2 x 5 = 10 புள்ளிகள்**

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான
மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில
மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும்
Zoom app மூலம் எமது வகுப்புகளில்
இணைந்து கொள்ள முடியும்.

அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...

Education கல்வி அධ්‍යාපන Kalvi.lk

Whatsapp
075 287 1457